[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–05

(உ) தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2023), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

@ 10-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2023 அக்டோபர் 11]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவை வரவேற்கிற அதே நேரத்தில், எதிர்வரும் காலத்தில் அதில் ஒரு திருத்தத்தை மேற்கொள்வதற்கான ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். குறிப்பாக, தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அரசு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை மானியமாகக் கொடுக்கிறது. நான் பொதுக் கணக்குக் குழுவின் மூலமாக பல்வேறு மாவட்டங்களுக்கு ஆய்வுக்குச் சென்றபோது, இந்தத் தனியார் பெரும் கல்லூரிகள், முறையாக எந்தக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநரிடத்திலோ, இயக்குநரிடத்திலோ கணக்குகளைத் தருவதில்லை. ஆனால், தொடர்ந்து அரசு நிதியை விடுவித்துக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்தோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலிருந்தோ கடிதம் பெற்றுக்கொண்டு சென்றால், அரசாங்கத்திடமிருந்து இவ்வளவு பெரும் நிதியைப் பெறும் இந்தத் தனியார் பல்கலைக்கழகங்கள் merit basis அடிப்படையில்கூட மாணவர்களைச் சேர்ப்பதற்கு முன்வருவதில்லை. ஆனால், இதற்கு நேர்மாறாக, கடந்தகால ஆட்சியில் ஒவ்வோரிடத்திற்கும் 5 இலட்சம் ரூபாய், 10 இலட்சம் ரூபாய் என்று நிதியைப் பெற்றுக்கொண்டு அனுமதித்திருக்கிறார்கள். இதற்கு ஒரு கடிவாளம் போடுகின்ற ஒரு சட்டத் திருத்தத்தை எதிர்காலத்தில் கொண்டுவர வேண்டும் என்கிற வேண்டுகோளோடு இந்த சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.